

# கேள்வி - பதில்



**கேள்வி : மாணிக்கவாசகருக்கு திருவாதவூரர் என்று பெயர் உண்டு. இந்த திருவாதவூரரின் சிறப்பு என்ன? இது எங்குள்ளது? திருவாதவூர் புராணம் எப்போது தோன்றியது?**

*- ப.சூரியராஜ்*
*உடுப்பிட்டி.*

**பதில் :** திருவாதவூரில் பிறந்தமையால் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு திருவாதவூரர் என்று திருநாமம் உள்ளது. அதனாலே அவரது வரலாறு பேசும் புராணமும் திருவாதவூரடிகள் புராணம் என்று குறிப்பிடப்படுகிறது. இதை விட திருவாதவூர் புராணம் என்று ஒன்று இருப்பதாக அறியமுடியவில்லை.

இந்த திருவாதவூர் தமிழ் நாட்டில் மதுரையிலிருந்து 24 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. இங்கு 'தானே வேதமாக உள்ளேன்' என சிவனார் திருமாலுக்கு உணர்த்தியதாக கூறப்படுகிறது.

சனிதோஷ நிவர்த்தி ஸ்தலமாக சனி பகவான் சிவபெருமானை பூஜித்த தலமாக கொள்ளப்படும் இத்தலத்தில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் மாணிக்க வாசகரால் அமைக்கப்பட்டது. இங்குள்ள சுவாமி - வேதபுரீஸ்வரர், அம்பாள் - வேதநாயகி, தலமரம் - மகிழமரம், ஏழு தீர்த்தங்கள் உண்டு.

திருவாதவூரில் அவதரித்த பெருமகனாரின் திருவரலாறு பேசும் திருவாதவூரடிகள் புராணம் எழுதியவர் கடவுள் மாமுனிவர். இவர் 15ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர். இதில் மொத்தம் 545 பாடல்கள் உண்டு. எட்டுப் படலங்களுடன் பக்திச்சுவை பெருக்கும் காப்பியமாக இது உள்ளது.

**கேள்வி : நான்காம் வருணத்தவர்களான எங்களுக்கு துடக்கு எத்தனை நாள்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி சொல்கிறார்களே?**

*- என் நடராஜன்*
*திருநெல்வேலி.*

**பதில் :** துடக்கு என்பது ஆசௌசம் எனப்படும். அந்த வகையில் சைவாசௌச விதியில் நான்காம் வருணத்தாருக்கு ஒரு மாதத்தில் சுத்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிலும், சிவபெருமானுக்கு அடிமை செய்து ஒழுகி தூய சிவவாழ்வு வாழ்ந்தால் இருபது நாட்களில் சுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னும் 'லிங்கார்ச்ச சிவபக்தனாம் ஆசௌசம் *பக்ஷம் ஆசரேத்' என்று உள்ளதால் இரண்டாம் தீட்சையான* விசேஷ தீக்ஷை பெற்று சிவபூஜை செய்தால் ஒரு பட்சமாகிய 15 நாட்களில் துடக்கு கழியும் சுத்தி ஏற்படும்.

இதைவிட இன்னும் ஒரு சில விதி விலக்குகளும் உண்டு. உதாரணமாக ஒருவன் துறவியாகி விட்டால் அவனுக்கு துடக்கு இல்லை என்றொரு குறிப்பு உண்டு. நிருவாண தீட்சை வரை பெற்றுள்ளவர்களுக்கும் ஆசௌசம் இன்னும் குறைய வாய்ப்புண்டு.

இதேபோல பிராம்மணர்களுக்கு பத்து நாட்களில் ஆசௌச சுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இவை சிவாகமங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்களே ஆகும்.

**கேள்வி : இந்துக்களின் கோயில் வாசலில் இருபுறமும் இரு உருவங்களை ஓவியமாக தீட்டி அல்லது செதுக்கி வைத்திருக்கிறார்களே அது ஏன்? சில சமயங்களில் பயம் கொள்ளுமாறு இருக்கிறதே? இதற்கு சரியான பதில் தரமுடியுமா?**

*- கபிரியேல் ஜீவநேசன்*
*மன்னார்.*

**பதில் :** மிகவும் நன்று. இந்த வடிவங்கள் வாயிற் காவலர்களாவர். துவாரபாலகர் என்பர். இறைவனது திருக்கோயிலுள் நுழைவோரை மனத்தூய்மை செய்து இறைவன் உறையும் இடம் என்பதை உணர்த்தும் முகமாக இவர்களை அமைப்பது வழக்கம்.

இந்த பாரம்பரியம் இந்து - பௌத்த கட்டடக்கலைகளில் காணலாம். உக்கிரமாக மட்டுமன்றி அமைதியான தோற்றத்தில் கூட இவர்களை அமைப்பர். காவல் செய்து கோயிலைக் காக்கும் இவர்கள் குறித்த கோயில் கடவுளரின் திருவடிவுக்கு இணங்க சிறுசிறு பெயர், உருவ மாற்றங்கள் பெறுவர்.

உதாரணமாக இவர்களை சிவாலயங்களில் சண்ட - பிரசண்டர் என்றும், விஷ்ணு கோயில்களில் ஜெயன் - விஜயன் என்றும், சக்தி கோயில்களில் ஹரபத்ரா - சுபத்ரா என்றும் அழைப்பர். இறைசிந்தனை ஒன்றையே மனங்கொள்க என்று அறிவுறுத்தும் இவர்கள் கோயிற் பாதுகாவலர்களாக கருதப்படுகிறார்கள். தங்களுக்கு புரிதலுக்கு வேண்டுமாயின் யூத - கிறிஸ்தவ இஸ்லாமிய மரபியலில் உள்ள அதிதூதர்களான மிக்கேல் போன்றோர் என கருதி புரிந்து கொள்ளலாம்.

**- பதில்கள் -**
**ஆசிரியர்**